இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 19-11-2024

# ஊட்டச்சத்தாக விளங்கும் அரசு

கனிவான சிந்தனையுடன் திட்டங்களைத் தீட்டும் கருணை வடிவான முதலமைச்சராக விளங்கி வருகிறார் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்!

**பெண்களின் அன்றாடச் செலவுகளை ஈடுகட்டும் வகையில் மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் -**

**பணிக்குச் செல்லும் பெண்களின் செலவைக் குறைக்கும் வகையில் கட்டண மில்லா பேருந்து பயணம் -**

**பள்ளிக்கு வரும் பிள்ளைகளின் பசிப்பிணி போக்கும் காலை உணவுத் திட்டம் -**

**கல்லூரிக்கு வரும் மாணவியருக்கு மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் -**

**கல்லூரிக்கு வரும் மாணவர்க்கும் மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் -**

இந்த வரிசையில் பிறந்த குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து வழங்கும் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். தாயுமானவராய், தந்தையுமானவராய் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை உயர்த்தி இருக்கிறது.

இந்தத் திட்டத்தின் இரண்டாம் கட்டச் செயல்பாடுகளை அரியலூரில் தொடக்கி வைத்த மேடையில் தாய்மார்கள் சிலர் பேசிய பேச்சு மிகமிக உருக்கமானது. **“எனது குழந்தை பிறக்கும் போது மிகமிகக் குறைவான எடையில்தான் பிறந்தது. என்ன செய்வது என்று நினைத்தேன். அதனை வளர்க்கும் அளவுக்கு என்னிடம் பண வசதி இல்லை. மாண்புமிகு முதலமைச்சரின் ஊட்டச்சத்து வழங்கும் திட்டத்தால் நிறைய நல்ல பொருட்கள் கிடைத்தது. அதன் மூலமாக என் குழந்தை நல்ல ஆரோக்கியத்தோடு இப்போது வளர்ந்து விட்டது”** என்று சொல்லி இருக்கிறார்கள் அந்த தாய்மார்கள்.

குழந்தைகளுக்காக மட்டுமே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏராளமான திட்டங்களை அறிமுகம் செய்துள்ளார். முதலமைச்சர் காலை உணவுத் திட்டம், முட்டையுடன் கூடிய சத்துணவுத் திட்டம், இளம் சிறார்களுக்கு இணை உணவுகள் வழங்கும் திட்டம், பாலூட்டும் தாய்மார்களுக்கு மகப்பேறு உதவித் திட்டம் ஆகிய திட்டங்கள் செயல்பாட்டில் உள்ளன.

மாண்புமிகு முதலமைச்சராக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் தமிழ்நாட்டில் பிறக்கும் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து குறைபாடுகளை களையும் நோக்குடன், **‘ஊட்டச்சத்தை உறுதி செய்’** என்ற திட்டத்தை 2022 ஆம் ஆண்டு செயல்படுத்தினார்.

இதற்காக தமிழ்நாடு முழுவதும் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அவர்களுக்கு தீவிர ஊட்டச்சத்து உணவு வகைகள் வழங்கப்பட்டது. அதில் தீவிர ஊட்டச்சத்து குறைபாடு உள்ளவர்களாக கண்டறியப்பட்ட குழந்தைகளில் 77.3 விழுக்காடு குழந்தைகள் இயல்பு நிலைக்கு திரும்பி உள்ளனர்.

**76,705 ஊட்டச்சத்து குறைபாடு உள்ளதாக கண்டறியப்பட்டுள்ள 0-6 மாத குழந்தைகளின் பாலூட்டும் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்துப் பெட்டகங்களை அவர்களின் வீட்டிற்கே சென்று வழங்கப்பட்டது. இதனால்தான் குழந்தைகள் ஆரோக்கியமாக வளர்ந்துள்ளார்கள்.**

‘ஊட்டச்சத்தை உறுதி செய்’ திட்டத்தின் இரண்டாம் கட்டம், 22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்தப்பட உள்ளது. இதனைத்தான் அரியலூரில் தொடங்கி வைத்துள்ளார் முதலமைச்சர் அவர்கள்.

2020 ஆம் ஆண்டு ஒரு அறிக்கை வெளியானது. நடப்பு ஆண்டுக்கான சர்வதேச பட்டினி குறியீட்டில் 94 ஆவது இடத்தில் இந்தியா உள்ளது என்பதுதான் அந்த அறிக்கை ஆகும். ஊட்டச்சத்து குறைபாடு, உயரத்துக்கேற்ற உடல் எடை காணப்படாத 5 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை, வயதுக்கேற்ற உயரம் காணப்படாத 5 வயதுக்குட்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை, சிறுவர்களின் இறப்பு விகிதம் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த பட்டினி குறியீடு கணக்கிடப்படுகிறது. இதில் இந்தியாவின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறது.

**“இந்திய மக்களில் 14 சதவிகிதம் பேர் ஊட்டச்சத்து குறைபாட்டுடன் காணப்படுகின்றனர். நாட்டில் 5 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களில் 37.4 சதவிகிதம் பேருக்கு உயரத்துக்கு ஏற்ற உடல் எடை காணப்படவில்லை. அவர்களில் 17.3 சதவிகிதம் பேர் வயதுக்கேற்ப வளரவில்லை. நாட்டில் 5 வயதுக்குட்பட்ட சிறுவர்களின் உயிரிழப்பு விகிதம் 3.7 சதவிகிதமாக உள்ளது. கர்ப்ப காலம் நிறைவடையும் முன்பே பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகமாகி வருகிறது. குறைந்த எடையுடன் பிறக்கும் குழந்தைகளும் அதிகமாகி வருகிறார்கள். இவை குறைந்த வருவாய் கொண்ட மாநிலங்களிலும் கிராமப்புறங்களிலும் அதிகரித்து வருகிறது”** இதுதான் இந்தியாவைப் பற்றி அந்த பட்டினி குறியீட்டு பட்டியல் சொல்லும் விபரம் ஆகும்.

இதனை மனதில் வைத்து ஒன்றிய அரசும், அனைத்து மாநில அரசுகளும் திட்டங்களைத் தீட்ட வேண்டும். அவர்கள் செய்கிறார்களோ இல்லையோ, நம் தமிழ்நாட்டு முதலமைச்சர் இதனை மனதில் வைத்துச் செயல்பட்டு நல்லதொரு திட்டத்தை கடந்த இரண்டு ஆண்டுகளாகச் செய்து காட்டி, அதில் வெற்றியும் பெற்று வருகிறார்கள்.

திட சக்தியுள்ள குழந்தைகளை உருவாக்கும் மக்கள் நலம் பேணும் அரசாக தமிழ்நாடு அரசு விளங்குவதன் அடையாளமே இத்திட்டமாகும்.

**“இவை எல்லாம் கட்சியைத் தாண்டி, அரசியலைத் தாண்டி, தேர்தலைத் தாண்டி செய்ய நினைப்பது ஆகும். மிக மிக மிக பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவன் நான் என்றார் கலைஞர். எத்தனை மிகமிக வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளுங்கள் என்றார் கலைஞர். மிக மிக மிக நலிந்த மக்களின் நல்வாழ்வுக்கான ஆட்சியாக இது அமைய வேண்டும் என்று நான் நினைக்கிறேன். விளிம்பு நிலை மக்கள் - பெண்கள் - குறிப்பாக குழந்தைகளின் நலன் பேணப்பட வேண்டும் என்று நினைக்கிறேன். குழந்தைகள் தங்களுக்குத் தேவையானதைக் கேட்க முடியாது. அப்படிக் கேட்க முடியாதவர்களுக்கு செய்ய நினைக்கிறேன் நான்”** என்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொல்லிய சொல் என்பது கருணை வடிவிலான வாக்குமூலம் அல்லவா!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.11.2024) சென்னையில் நடைபெற்ற 16–வது நிதிக்குழு கூட்டத்தின்போது, தமிழ்நாடு மாநிலத்தின் வளர்ச்சி திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டிற்கான கோரிக்கை மனுவினை 16–வது நிதிக் குழுவின் தலைவர் முனைவர் அரவிந்த் பனகாரியா அவர்களிடம் வழங்கினார். உடன் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன் ஆகியோர் உள்ளனர்.

### தமிழ்நாடு அரசின் விளக்கம் மிகச் சிறந்தது!

# ஆழ்ந்த ஆராய்ச்சி - தெளிந்த பகுப்பாய்வுடன் கூடிய விளக்கம்!

## தமிழ்நாட்டின் நிதித் துறைக்கு – நிதிக் குழுத் தலைவர் பாராட்டு!

**சென்னை, நவ.19–**

**நிதிக்குழு ஆணையத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் வழங்கப்பட்ட விளக்கம், “ஆழ்ந்த ஆராய்ச்சி, தெளிவான பகுப்பாய்வுடன் கூடிய விளக்கம்” என தமிழ்நாட்டின் நிதித்துறையை நிதிக்குழுத் தலைவர் பாராட்டியுள்ளார்.**

அதன் விபரம் வருமாறு:-



புகழ்பெற்ற பொருளாதார அறிஞர் டாக்டர் அரவிந்த் பனகாரியா அவர்கள் தலைமையின்கீழ் அமைக்கப்பட்டுள்ள 16வது நிதிக்குழு தமிழ்நாட்டுக்கு வருகை புரிந்தது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.11.2024) சென்னையில் நடைபெற்ற 16-வது நிதிக்குழுக் கூட்டத்தில் உரையாற்றினார்.

இக்கூட்டத்தில், 16-வது நிதிக் குழுவின் தலைவர் முனைவர் அரவிந்த் பனகாரியா, உறுப்பினர்கள் அஜய் நாராயண் ஜா, திருமதி அன்னி ஜார்ஜ் மேத்யு, முனைவர் மனோஜ் பாண்டா, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், 16-வது நிதிக்குழுவின் செயலாளர் ரித்விக் பாண்டே மற்றும் நிதிக்குழுவின் உயர் அலுவலர்கள், தமிழ்நாடு மாநில திட்டக்குழுத் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன், நிதித் துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், துறைச் செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

இக்குழுவின் கூட்டத்தில் உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “தொடர்ந்து வளர்ச்சியடைந்து வரும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு நீதியும் நியாயமும் கிடைக்கும் வகையில், நிதிப் பகிர்வு முறையை மாற்றிட வேண்டும்!” - என்பது உள்ளிட்ட, தமிழ்நாடு அரசின் பல்வேறு முதன்மையான கோரிக்கைகளை எடுத்துரைத்து உரையாற்றினார்.

மேலும் - தமிழ்நாடு அரசின் கோரிக்கைகளை எடுத்து விளக்கும் ஆவணம் போன்ற புத்தகத்தை அழகுற வடிவமைத்து நிதிக்குழுத் தலைவர் அவர்களிடம் வழங்கினார்.

முதல்வரின் உரை மற்றும் தமிழ்நாடு அரசின் விளக்கம் - ஆகியன கண்ட பொருளாதார அறிஞர் டாக்டர் அரவிந்த் பனகாரியா, “ஆழ்ந்த ஆராய்ச்சியும், தெளிவான பகுப்பாய்வுடன் கூடிய விளக்கம் அவை” - என்று, தமிழ்நாட்டின் நிதித் துறைக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான செய்தி வெளியீடு வருமாறு:

**நிதிக்குழுத் தலைவரின் பாராட்டு: தமிழ்நாடு நிதித்துறையின் சிறந்த விளக்கம்!**

**இதுவரை 12 மாநிலங்களுக்குச் சென்றுள்ள நிதிக்குழு ஆணையத்தின் தலைவர், தமிழ்நாடு அரசின் விளக்கம் மிகச் சிறந்தது என்று பாராட்டுத் தெரிவித்துள்ளார்.**

**ஆழ்ந்த ஆராய்ச்சி, தெளிவான பகுப்பாய்வுடன் கூடிய விளக்கம் அளித்த தமிழ்நாட்டின் நிதித் துறைக்குப் பாராட்டுகள்!**

இவ்வாறு அச்செய்திக் குறிப்பில் - தமிழ்நாட்டின் நிதித்துறைக்கு 16வது நிதிக் குழுவின் தலைவர் புகழாரம் சூட்டியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### மாவட்டச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன்- டாக்டர் சந்திரபாபு பங்கேற்பு

# சோழிங்கநல்லூர் மேற்குப் பகுதி பாக முகவர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன் அறிவிப்பு!

சென்னை, நவ. 19 -

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் மேற்குப் பகுதி பாக முகவர்கள் கூட்டம் நாளை நடைபெறுகிறது என பகுதிச் செயலாளர் பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு: -

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் மேற்குப் பகுதிக்குட்பட்ட பாக முகவர்கள் பி.எல்.ஏ.2 பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, எனது (பகுதிச் செயலாளர் - மண்டலக் குழுத் தலைவர் பெருங்குடி எஸ்.வி. ரவிச்சந்திரன்) தலைமையில் (20.11.2024 - புதன்கிழமை) மாலை 5 மணிக்கு மடிப்பாக்கத்தில் உள்ள ரூபி திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இதில் தொகுதி பொறுப்பாளர் கழக இலக்கிய அணி பொருளாளர் டாக்டர் நா.சந்திரபாபு ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசனை வழங்கி பேசுகிறார். வட்டச் செயலாளர் எம்.கே.ஜெய் வரவேற்கிறார்.

எனவே இக்கூட்டத்தில் சோழிங்கநல்லூர் மேற்குப் பகுதிக்குட்பட்ட பகுதி நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், பி.எல்.ஏ.2 பாக முகவர்கள் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் எஸ்.வி.ரவிச்சந்திரன் அறிவித்துள்ளார்.

### மாநகர போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில்

# சுமைக் கட்டணம் வசூலிப்பது குறித்து அறிவுறுத்தல்!

## மாநகர போக்குவரத்துக் கழகம் அறிவிப்பு!

சென்னை, நவ.19-

மாநகர போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பயணிக்கும் பயணிகள் தாங்கள் கொண்டு செல்லும் பொருட்களுக்கான சுமைக் கட்டணம் குறித்து நடத்துநர் மற்றும் பயணிகளிடையே சுமுகமான உறவை உறுதி செய்யும் வகையில் பயணிகளிடமிருந்து பெறப்பட்ட கருத்துகள் (Suggestion) /புகார்களின் அடிப்படையில் மா.போ.கழகம் இயக்கும் சாதாரண, விரைவு மற்றும் சொகுசு பேருந்துகளில் நடத்துநர்கள் பயணிகள் கொண்டுவரும் சுமைகளுக்கு (Luggage), சுமைக்கட்டணம் வசூலிக்கும் போது கீழ்கண்ட விதிமுறைகளை பயணிகளிடம் நடத்துநர்கள் பின்பற்றி சுமைக் கட்டணம் வசூலிப்பது தொடர்பாக அறிவுறுத்தப்படுகிறது.

1. மா.போ.கழக பேருந்துகளில் பயணிகள் தங்கள் சொந்த உபயோகத்திற்காக தோள்களில் மாட்டி செல்லக்கூடிய பைகள், துணிகள் அடங்கிய கைப்பெட்டிகள்/ பைகள், கேமிரா போன்ற கையடக்கமான சாதனங்கள், Laptops, சிறிய அளவிலான கையில் எடுத்து செல்லதக்க மின் சாதன பொருட்கள் போன்றவைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் சக்கர நாற்காலிகள் (Wheel Chair), கலை நிகழ்ச்சிக்கு செல்லும் நாட்டுப்புற கலைஞர்கள் கொண்டு செல்லும் வாத்திய கருவிகள் முதலியவைகளும் இலவசமாக ஏற்றிச்செல்ல கூடிய சுமைகளாகும்.

2. மா.போ.கழக பேருந்துகளில் பயணிகள் தங்கள் உடைமைகளை எடுத்துச்செல்ல டிராலி வகையான சூட்கேஸ்கள் அதிகபட்சமாக 65cm (Medium Size) அளவுள்ள சூட்கேஸ்கள் மற்றும் பைகள் ஆகியவைகளை கட்டணமின்றி பயணிகள் எடுத்துச் செல்ல அனுமதிக்கலாம்.

**இலவசமாக 20 கிலோ எடையுள்ள பொருட்கள்!**

3. மா.போ.கழக பேருந்துகளில் ஒரு பயணி சொந்த உபயோகத்திற்கான 20 கிலோ எடையுள்ள பொருட்களை கட்டணமின்றி எடுத்துச் செல்ல அனுமதிக்கலாம்.

4. பயணிகள் எடுத்துவரும் 65cm (Large size) அளவிற்கு மேல் உள்ள டிராலி வகையான சூட்கேஸ்கள் மற்றும் பெரிய பைகள், 20 கிலோவிற்கு மேல் எடையுள்ள சுமைகளுக்கு 1 பயணிகளுக்கான பயண கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும்.

5. 20 கிலோவுக்கும் குறைவான எடையுள்ள வணிக நோக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும் சுமைக்களுக்கு 1 பயணிகளுக்கான பயண கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும்.

6. அரசால் தடை செய்யப்பட்ட பொருட்கள், கடத்தல் பொருட்கள், எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்களை கொண்டு செல்ல அனுமதிக்கக் கூடாது.

7. பேருந்தில் அதிக இடத்தை ஆக்கிரமித்து மற்ற பயணிகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் பெரிய சுமைககளை அனுமதிக்கக் கூடாது.

8. சக பயணிகளை பாதிக்கும் ஈரமான சுமைகளை அனுமதிக்கக் கூடாது.

9. பயணிகள் இல்லாத சுமைகள் தனியாக பேருந்தில் அனுமதிக்கக் கூடாது.

10. செய்தித்தாள்கள் மற்றும் தபால்களை கொண்டு செல்ல, முன் அனுமதி பெற வேண்டும்.

டிராலி வகையான சூட்கேஸ்கள் கொண்ட சுமைகள் மற்றும் கட்டணங்கள் குறித்த விளக்கத்தினை நடத்துநர்கள், போக்குவரத்து மேலாளர்கள், ஆய்வாளர்கள், பயணச்சீட்டுப் பரிசோதகர்கள் மற்றும் நேரக் காப்பாளர்கள் அனைவருக்கும் விளக்கிக்கூறி தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி அனைத்து கிளைமேலாளர்கள் மற்றும் மண்டல மேலாளர்கள் ஆகியோருக்கு மேலாண் இயக்குனர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு மாநகரப் போக்குவரத்துக் கழகம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; அரவிந்த் கெஜ்ரிவால் மீது குற்றச்சாட்டு கூறி, டெல்லி அமைச்சர் கைலாஷ் கெலட் ராஜிநாமா செய்ததுடன், ஆம் ஆத்மி கட்சியிலிருந்தும் விலகியிருக்கிறாரே ?

**பெரியதம்பி : ஆமாம் தம்பி; அவர் சி.பி.ஐ. மற்றும் அமலாக்கத் துறை வழக்குகளை எதிர்கொண்டு வருகிறார். எனவே ராஜிநாமா செய்து, விலகுவதைத் தவிர அவருக்கு வேறு வழி இல்லை. மேலும் அரவிந்த் கெஜ்ரிவால் மீது குற்றச்சாட்டுகளையும் அடுக்கியிருக்கிறார். அடுத்த ஆண்டு பிப்ரவரியில் டெல்லி சட்டசபைக்குத் தேர்தல் நடக்க இருக்கிறது. இப்போது புரிகிறதா டெல்லி அரசியலில் இந்த மாதிரி நிகழ்வுகளின் பின்னணியில் இருப்பது எந்த சக்தி என்று ?**

**‘மனோகரா’ திரைப்படத்தில், “ஆரம்பமாகி விட்டதடி அரூபியின் (அற்புத) வேலைகள்” என்ற கலைஞரின் வசனம் நினைவுக்கு வருகிறதா !**